**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 134/2015** | | |
| **PW/DW/CW** | : | **PW4** | | |
| **Name** | : ராஜாத்தி | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : **க/பெ. மனோகரன்** | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

(A1 present. A2 absent u/s. 355 of BNSS petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.12.2024

---

**முதல் விசாரணை:**

நான் வில்லாணிசாலையில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி மற்றும் வழக்கின் மற்றொரு எதிரியான மகாலட்சுமியைத் தெரியாது. வழக்கின் அ.சா.1யை எனக்குத் தெரியாது. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அ.சா.3யை எனக்கு தெரியும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. வழக்கில் சாட்சியாக என்னைச் சேர்த்த விபரம் எனக்கு தெரியாது.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து அனுமதி கோரி வழங்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை.**

அ.சா.1 உமா எனக்கு பழக்கமானவர் என்று சொன்னால் சரியல்ல. கடந்த 2010ம் ஆண்டு 50,000/- ரூபாய் எதிரியிடம் 2வது எதிரியான மகாலெட்சுமியிடம் வட்டிக்கு கடனாக அ.சா.1 பெற்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. மேலும், 50,000/-திற்கு ரூபாய் 6000/- வட்டியை முதலிலேயே எடுத்து கொண்டு மீதி பணத்தை அ.சா.1க்கு கடனாக கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்சொன்ன கடனுக்கு 30,000/- ரூபாய் கட்டிய நிலையில் மீதி 20,000/- கட்ட வேண்டி இருந்தது என்றாலும், அதனை தொடர்ந்து 2வது எதிரி ரூபாய் 2,50,000/- லட்சம் ரூபாய் இரண்டாவது எதிரி தன்னிடம் இருப்பதாகவும், வாங்கி கொள்ளும்படி அ.சா.1னிடம் சொன்னதன்பேரில் அதை அ.சா.1 பெற்றுக்கொண்டார் என்றாலும், அதற்கும் 50,000/- ரூபாய் வட்டியாக எடுத்துக்கொண்டு. 2 லட்சம் மட்டுமே கையில் தந்தார் என்றாலும், மேற்படி விபரம் எனக்கு நேரடியாக தெரியும் என்றாலும் சரியல்ல.

அ.சா.1 அந்த பணத்தைத் திருப்பி செலுத்தி வந்த

வேளையில் மீண்டும் 3,50,000/- ரூபாய் 2வது எதிரி பெற்றுக்கொள்ளுபடி சொன்னதன் பேரில் 1 லட்சத்திற்கு 12,000/- ரூபாய் என்ற அளவில் வட்டியை எடுத்துக்கொண்டு மீதி பணத்தை கையில் கொடுத்தார் என்றாலும், கொஞ்ச கொஞ்சமாக பணத்தை 2012ம் ஆண்டு வரை திருப்பி அ.சா.1 செலுத்தி வந்தார் என்றாலும், பின்னர் மீதி பணத்தை கொடுக்கமுடியவில்லை என்பதால் கடைசியில் 30,000/- ரூபாய் மட்டுமே கட்டவேண்டியிருந்ததை அ.சா.1யை மாடுகளை எல்லாம் விற்று தான் கட்டி விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. மீதி பணத்தை அ.சா.1 திரும்ப செலுத்த இயலாததால் 1, 2 எதிரிகள் அ.சா.1னிடம் கந்து வட்டிக்கு தானே வாங்கினீர்கள் என்று சொன்னார்கள் என்றாலும், 10 நாட்கள் கட்டவில்லை என்றாலும் அதற்கும் ஒரு வட்டி போட்டார்கள் என்ற விபரமும், அதனை தொடர்ந்து ஒருநாள் 1, 2 எதிரிகள் வீட்டிற்கு வந்து அ.சா.1ற்கு சொந்தமான இடத்தை எழுதி கொடுக்கும்படி கேட்ட விபரம் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரியல்ல.

3. எதிரிகள் அ.சா.1டம் வெள்ளை பேப்பரில் இரண்டு தடவை கையொப்பம் வாங்கினார்கள் என்ற விபரமும், அதில் அ.சா.1ம், அவரது கணவரும் கையொப்பம் போட்டு 4,40,000/- ரூபாய் எழுதிக்கொண்டு கையொப்பம் வாங்கிகொண்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அத்தோடு மற்றொரு பேப்பரிலும் அ.சா.1டமும், அவரது கணவரிடமும் அவர்களது காட்டை காட்டி கையொப்பம் வாங்கிகொண்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரிகள் மொத்தம் 8,80,000/- ரூபாய் கொடுக்க வேண்டும் என்றும் இல்லையென்றால் அ.சா.1ன் வீட்டை காலி செய்து கொடுக்க வேண்டும் என்று மிரட்டிய போது நான் சம்பவ இடத்தில் இருந்து நான் சண்டையை விலக்கிவிட்டேன் என்றால் நான் காலையில் 6.00 மணிக்கு கூலிவேலைக்கு சென்றுவிட்டு மாலை 7.00 மணிக்குமேல் தான் வீட்டிற்கு வருவேன். அதனால் சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சம்பவத்தன்று நான் சம்பவ இடத்தில் இல்லை. சம்பவத்தை நான் நேரில் பாக்கவில்லை. மேற்படி சண்டையின் போது அ.சா.1 மற்றும் அவரது கணவரை எதிரிகள் நீங்கள் செத்துபோங்கள் என்றும் நாங்கள் வீட்டை எடுத்து கொள்கிறோம் என்று சொன்னார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியும் என்றாலும், அந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னிடம் விசாரித்து வாக்குமூலம் வாங்கிக்கொண்டார்கள் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கின் எதிரிகள் எனது வீட்டின் அருகில் குடியிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. வழக்கின் சம்பவத்தினை நான் நேரில் பார்த்துவிட்டு, தற்போது அ.சா.3 எனக்கு தெரிந்தவர் என்பதால் அவர்

கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.

S.d./Rasathi
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.